இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Register as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர் : 140
இதழ் : 03
பக்கங்கள் : 08
திகதி : 21.02.2016
விலை : 20.00

# யாழ். மறைமாவட்ட மேய்ப்புப் பணி மாநாடு ஆகஸ்ட் மாதம் நடைபெற ஏற்பாடு யாழ். ஆயர் அறிவிப்பு

யாழ். மறைமாவட்ட ரீதியிலான மேய்ப்புப்பணி மாநாடு ஒன்றை இவ் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடந்த தாம் திட்டமிட்டுள்ளதாகவும் இதற்கான ஆயத்தப்பணிகளை மேற்கொள்ளுமாறும் யாழ்.ஆயர் பேரருட் திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கடந்த 15.02.2016 அன்று ஆயர் இல்லத்தில் நடைபெற்ற குருக்கள் மன்ற கூட்டத்தின் போது தெரிவித்தார். இதற்கென குரு முதல்வர் தலைமையிலான ஒரு குழுவையும் அவர் நியமித் துள்ளார்.

யாழ். மறைமாவட்டத்தில் கடைசியாக மேய்ப்புப்பணி மாநாடு எமது முன்னாள் ஆயர்பேரருட்திரு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை அவர்களின் வழிநடத்தலில், அந்நாள் குருமுதல்வர் அருட்தந்தை எஸ். ஜே. இம்மானுவேல் அடிகள், காணாமல்போன அருட்தந்தை பிரான்சிஸ்யோசப் ஆகியோரின் தட்டமிடலில் "புதுப்புனல்" என்ற தலைப்பில் 1994ம் ஆண்டு நடைபெற்றது குறிப்பிடத் தக்கது. இம் மாநாட்டு முடிவில் "புதுப்புனல்" என்ற ஆவணமும் வெளியிடப்பட்டது.

## காவலூர் மண்ணின் மைந்தனின் முதல் வரவும் நன்றித் திருப்பலியும்



நல்ல ஆயன் பணியை இப்பாரினில் ஆற்ற புதிதாக திருநிலைப்படுத்தப்பட்ட காவலூர் மண்ணின் மைந்தனும் யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயருமான பேரருட் திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் வரவேற்பு நிகழ்வும் நன்றித் திருப்பலியும் பங்குத்தந்தை அருட்பணி பா. பி. இராசசிங்கம் அடிகளாரினதும் உதவிப்பங்குத்தந்தை அருட்பணி சசிகரன் அடிகளாரினதும் வழிப்படுத்தலுடனும் பங்குமக்களின் ஒத்துழைப்புடனும் 23.01.2016 சனிக்கிழமை காவலூர் பங்கில் இறைவனின் அருளால் சிறப்புற நடைபெற்றது. இந்நிகழ்வில் காவலூர் மண்ணின் மைந்தர்களான யாழ் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்ட

(8ம் பக்கம் பார்க்க...)

## நீதிபதிகளாக அல்ல, பாசமுள்ள தந்தையர்களாக செயற்படுங்கள்

### ஒப்புரவு அருட்சாதனத்தை வழங்கும் குருக்களுக்கு திருத்தந்தை அறிவுரை

ஒப்புரவு அருளடையாளம் வழங்கும் அருள்பணியாளர், இந்த அருளடையாளத்தை அணுகிவரும் மனிதர்களின் இதயங்களை, கடவுளின் இரக்கம் என்ற ஆடையால் உடுத்தி, அவர்கள் உணரும் வெட்க உணர்வை நீக்கி, மகிழ்வில் அவர்களை நிரப்பவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அருள்பணியாளர்களுக்கு வழங்கிய ஓர் உரையில் குறிப்பிட்டார்.

பெப்ரவரி 10, திருநீற்று புதனன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகெங்கும் அனுப்பியிருக்கும் 'இரக்கத்தின் மறைப் பணியாளர்களை' (Missionaries of Mercy) வத்திக்கானில் சந்தித்து, அவர்களிடம் மனம் திறந்து பேசியபோது, இவ்வாறு கூறினார்.

உலகெங்கிலிருமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 1142 'இரக்கத்தின் மறைப்பணியாளர்களில்' வத்திக்கானுக்கு வருகை தந்துள்ள 726 அருள்பணியாளர்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சந்தித்தபோது, தன்னை அணுகி வரும் எவரையும் வரவேற்கக் காத்திருக்கும் அன்னையாக விளங்கும் திருஅவையின் பிரதிநிதிகளாக, இந்த அருள் பணியாளர்கள் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

(8ம் பக்கம் பார்க்க...)

## போரில் இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் உரிமை தேவை

### அரசமைப்பு சீர்திருத்தக் குழுவிடம் நீதி சமாதான ஆணையம் ஆலோசனை தெரிவிப்பு

இலங்கையில் 2009ம் ஆண்டில் முடிவடைந்த உள்நாட்டுப் போரில் இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கு முழு உரிமை வேண்டும் என்று, அந்நாட்டின் வடக்கிலுள்ள தமிழர்கள் விரும்புவதாக, யாழ்ப்பாண மறைமாவட்ட நீதி சமாதன ஆணையம் தெரிவித்துள்ளது.

அரசமைப்பு சீர்திருத்தங்களுக்கு, அரசு உருவாக்கியுள்ள பொதுமக்கள் பிரதிநிதிகள் குழுவை இவ்வாரத்தில் சந்தித்த இவ் ஆணையம் இனங்கள், மொழிக் குழுக்கள், மதங்கள் ஆகியவற்றிக் கிடையே பதட்டநிலைகளையும் மோதல்களையும் ஊக்குவிக்கும் தீவிரக் கொள்கையுடைய குழுக்கள் மீது அரசு தடை விதிக்க வேண்டுமென்றும் தமிழர்கள் விரும்புகின்றனர் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

போரில் இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்துவது குறித்த தடையை 2015ம் ஆண்டில் இலங்கையின் புதிய அரசு ஓரளவு நீக்கியுள்ளது.

## கரு அழிப்புப் பாவத்திற்கான பாவமன்னிப்பை எல்லாக் குருக்களிடமும் பெறலாம்

### இரக்கத்தின் ஆண்டில் விசேட சலுகை

பொதுவாக கரு அழிப்பு பாவத்தை மன்னிக்கின்ற அதிகாரம் எல்லாக் குருக்களுக்கும் கிடையாது. இது திருச்சபையின் தலைமைப் பீடத்திற்கே உரியது. ஆனால், இந்த இரக்கத்தின் யூபிலி ஆண்டில் இப்பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தை எல்லாக் குருக்களும் கொண்டிருப்பர் என திருத்தந்தை அறிவித்துள்ளார்.

கரு அழிப்புப் பாவத்தை அக்கருவைத் தாங்கியிருந்த பெண் மட்டும்தான் புரிகிறார் என்ற எண்ணம் தவறானது. அச்செயலைச் செய்ய உடந்தையாயிருந்த அனைவருமே இப்பாவத்தைப் புரிந்த பாவிகள் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். திருமணத்தின் பின் கணவனும் மனைவியும் ஒருமித்து கரு அழிப்பு செய்திருந்தால் கணவனுக்கும் அப்பாவத்தில் சமபங்கு உண்டு. ஒரு பெண் பலவந்தத்தின் பேரில் கரு அழிப்பு செய்தால் அப் பெண்ணைவிட அவரைப் பலவந்தப்படுத்தியவர்கள் அதிகமான பாவிகளாகக் கருதப்படுவர்.

## உள ஆற்றுப்படுத்தல் பணியை ஆற்றும் முதல் கடமை பெற்றோர், ஆசிரியர்களுக்கே உரியது

### யாழ். ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை



யாழ். அகவொளி நிலைய இயக்குனர் அருட் திரு.எஸ்.ஜே. இராஜநாயகம் அடிகளாரின் 8வது வெளியீடாக "நலமுடன் வாழ உள ஆற்றுப்படுத்தல்" என்னும் நூல் வெளியீடு அண்மையில் யாழ். ஆயர் பேரருட் திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்றபோது உரையாற்றிய ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



(8ம் பக்கம் பார்க்க...)

## குருக்கள் துறவியருக்கு...

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள அருட்திரு. ஆல்பேட் அடிகள், சகோ. சாஜு ஆகியோரால் நடாத்தப்படுகின்ற விசேட தவக்காலத்தியான வழிபாடுகள் பெப்ரவரி 29, திங்கள் காலை 9.30 மணிமுதல் 12 மணி வரை குருக்கள், துறவியர்களுக்காக யாழ். பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள இறைதியான இல்ல மண்டபத்தில் நடைபெறும். அனைத்து குருக்கள் துறவியரும் இவ்வழிபாட்டில் கலந்து பயன்பெற அழைக்கப்படுகின்றார்கள்.

### மரியாயின் சேனை ஆச்சேஸ் விழா

எதிர்வரும் 28ம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ் மரியன்னை பேராலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும்.

(செய்தி 7ம் பக்கம்)

## எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

# பணமா? பாசமா?

இவ்விதழில் உள்ளே பிரசுரிக்கப்பட்டுள்ள ஒரு பணக்கார முதியவரின் கதையின் சாரமிது: தன் சொத்துக்களை பிரித்தெடுக்க, தான் எப்போ சாவேன் என்று எதிர்பார்த்திருக்கும் பிள்ளைகளுக்காக முன்கூட்டியே அவற்றை பிள்ளைகளுக்கு எழுதிவைத்துவிட்டு நிம்மதியாக வாழ விரும்புகிறார் ஒரு முதியவர்.

இன்று பத்து மாதம் சுமந்து பெற்ற தாயைவிட, பகலிரவாய் உழைத்து காத்த தந்தையைவிட, பாசமாய் வளரந்த சகோதர சகோதரிகளைவிட, துணையாயிருந்த பராமரித்த மனைவியைவிட, கணவனைவிட பணம் முக்கியமாகக் கருதப்படுதப்படவது உண்மையானது என்பதுதான் மேற்படி சம்பவத்தின் கருத்தாகும்.

உலகின் பல நாடுகளில் இன்று தலைவரித்தாடும் பயங்கரமான போர்களுக்கும், வன்முறைகளுக்குமான காரணத்தை ஆர அமர சிந்தித்தால் எங்கோ எவரோ போட்ட பணம் திரட்டலுக்கான திட்டத்தின் விளைவுகளே எனபதைக் காணமுடியும்.

இன்றைய உலகு பணத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் விளையும் தீமைகளை திருத்தந்தை இவ்வாறு கூறுகிறார்: தனி மனித உறவுகளுக்குக்கூட பொருளாதாரபயன்பாடே முக்கியக் காரணியாக இருந்து, இலாபமே அனத்திலும் முக்கியமானதாகத் தெரிகின்றது. இதனால், தொழிலின் ஒழுக்க ரீதிக் கூறுகள் இழக்கப்படுகின்றன. இலாபமே முக்கியமாகிப் போனதால், தொழிலாளர்கள் தங்கள் முக்கியத்துவத்தை இழப்பதுடன், சுரண்டவும் படுகின்றனர். அவர்கள் பயன்படுத்தப்பட்டு, தூக்கியெறியும் ஒரு பொருளாக நடத்தப்படுகின்றனர்.

பணத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதனால் ஏற்பட்டுள்ள இன்றைய அடிமை நிலைகளுக்கு நாம் ஒரு நாள் இறைவனிடம் பதில் சொல்லியே ஆகவேண்டும். இத்தகைய நிலைகள் மீண்டும் இடம்பெறாமலிருப்பதை உறுதிச் செய்யவேண்டும்.

பேராசை எனும் போதை தரும் கடலில் மனித மாண்புகள் இழக்கப்படக் கூடாது என்பதில், திருஅவைப் படிப்பினைகள் உறுதியாக நிற்கின்றன.

எத்தகைய ஓர் உலகை நம் குழந்தைகளுக்கு விட்டுச் செல்லப்போகிறோம் என்பது குறித்து சிந்திப்போம். சுரண்டல், போதிய ஊதியமற்ற வேலை, பணியிடக் கொடுமைகள் போன்றவற்றைக் கொண்ட ஒரு நாட்டையா, அல்லது, மாண்புடன் கூடிய வேலை, தங்குவதற்குவீடு, வேலைவாய்ப்பு ஆகியவற்றைக் கொண்ட நாட்டையா, என சிந்திப்போம். ஊழலும், வன்முறையும், பாதுகாப்பற்ற நிலைகளும், சந்தேகங்களும் நிரம்பிய காற்றையா, நம் வருங்காலத் தலை முறையினருக்கு விட்டுச் செல்லப்போகிறோம்?

மனிதனைவிட உயர்ந்தவைகள் அல்ல, முதலீடுகளும் இலாபமும். பொதுநலனுக்குப் பயன்படுபவைகளாக அவை இருக்க வேண்டும். நம் குழந்தைகளுக்கு ஏற்ற ஓர் உலகை கட்டியெழுப்ப ஒன்றிணையுங்கள். பணத்தினால்ல! பாசத்தினால்!!

**ஆசிரியர்**

# அவர் ஓர் இரக்கத்தின் மறைப்பணியாளர்

கொரியாவில் நிகழ்ந்து வந்த போரில், அமெரிக்க இராணுவத்தின் சார்பில் பணியாற்றிவந்த ஓர் அருள் பணியாளரைக் குறித்து சொல்லப்படும் உண்மைச் சம்பவம் இது. அப்போரில் காயப்பட்டு, உயிருக்குப் போராடிவந்த ஒரு வீரர், இறப்பதற்கு முன், ஒப்புரவு அருட்சாதனம் பெறவேண்டும் என்ற தன் ஆவலை வெளியிட்டார். அவருக்கு மருத்துவ உதவிகள் செய்தவர், திகைத்தார். இந்தப் போர்க்களத்தில் ஓர் அருள்பணியாளரைத் தேடி எங்கே போவது? என்று அவர் தடுமாறிக் கொண்டிருந்தபோது, அந்த வீரனுக்கு அருகில், மரணத்துடன் போராடிக் கொண்டிருந்த மற்றொரு வீரர், "நான் ஓர் அருள்பணியாளர்" என்று தன்னையே அறிமுகப்படுத்தினார். அவரது நிலையைக் கண்ட மருத்துவர், "நீங்கள் அசையாதீர்கள். அசைந்தால், உங்கள் உயிருக்குப் பெரும் ஆபத்து" என்று அந்த அருள்பணியாளரிடம் எச்சரித்தார். அதற்கு அந்த அருள்பணியாளர், "நான் வாழப்போகும் இந்த ஒரு சில மணித்துளிகளை விட, என் நண்பரின் ஆன்மா மிகவும் முக்கியம்." என்று சொன்னபடி, தன்னிடம் எஞ்சியிருந்த சக்தியை எல்லாம் திரட்டி, தரையோடு தரையாக ஊர்ந்து சென்றார். சாகும் நிலையில் இருந்த அந்த வீரனின் இறுதி நேரத்தில், அவருக்கு ஒப்புரவு அருட்சாதனத்தை வழங்கினார். அந்த வீரனும், அருள்பணியாளரும் அமைதியாக இறந்தனர்.

இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் ஒரு சிறப்பு நிகழ்வாக, பிப்ரவரி 10, 'திருநீற்றுப் புதனன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 1000க்கும் மேற்பட்ட அருள் பணியாளரை, 'இரக்கத்தின் மறைப்பணியாளர்களாக' (Missionaries of Mercy) உலகெங்கும் அனுப்பி வைக்கிறார்.

# சிறைக் கைதிகளாகிய உங்களோடு இரக்கத்தின் சிறப்பு யூபிலியைக் கொண்டாடாமல் இங்கிருந்து என்னால் செல்ல இயலாது!

## மெக்சிகோ சிறைக் கைதிகள் மத்தியில் திருத்தந்தை ஆற்றிய உருக்கமான உரை




அன்பு சகோதர, சகோதரிகளே, மெக்சிகோ நாட்டில் நான் மேற்கொண்ட பயணத்தின் இறுதிக்கு வந்துள்ளேன் உங்களைச்சந்தித்து, இரக்கத்தின் சிறப்பு யூபிலியைக் கொண்டாடாமல் இங்கிருந்து என்னால் செல்ல இயலாது.

நான் ஆப்ரிக்காவில் பயணம் மேற்கொண்டபோது, உலக மனைத்திற்கும் தேவையான இரக்கத்தின் கதவை, பாங்கி நகரில் திறந்தேன். உங்களோடு இணைந்து நான் மறுபடியும் கூற விழைவது இதுதான்: இறைவனின் இரக்கம் சென்றடைய முடியாத இடம் ஒன்றுமில்லை, அவரது இரக்கம் தொடாத மனிதரும் இல்லை.

உங்களோடு இரக்கத்தின் யூபிலியைக் கொண்டாடுவது, உலகைக் கட்டிப்போட்டிருக்கும் வன்முறை, குற்றம்ஆகிய வட்டங்களை உடைக்கவேண் டும் ஏன்பதை நமக்கு மீண்டும் நினைவுறுத்தவே.

பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு, ஒருவரைத் தனிமைப்படுத்தி, சிறைப்படுத்தினால் போதுமானது என்றகருத்தில் நாம் பல நூற்றாண்டுகளைக் கழித்து விட்டோம். இவ்வாறு செய்வதால், தனி மனித வாழ்வையும், அவரது குடும்பங்களையும் துன்புறுத்துகிறோம் என்பதை மறந்துவிட்டோம்.

நாம் வாழும் சமுதாயத்தின் நிலையை, சிறைகள் நமக்கு நினைவுபடுத் துகின் றன. வாழ்வை ஆதரிக்காமல், அதை தூக்கியெறியும் கலாச்சாரம் வளர்ந்துவிட்டது என்பதற்கு சிறைகள் ஓர் அடையாளமாக உள்ளன.

குற்றவாளிகளை மீண்டும் சமுதாயத்தில் ஒருங்கிணைக்க வேண்டும் என்பதை, இரக்கம் நமக்கு நினைவுபடுத்துகிறது. ஒருங்கிணைப்பது என்ற முயற்சி, சிறையில் துவங்குவது இல்லை மாறாக, வெளியில், நமது நகர வீதிகளில் ஆரம்பமாகவேண்டும்.

சமுதாய நலன் என்ற ஒரு சீரானக் கட்டமைப்பை உருவாக்கினால், ஒருங்கிணைப்பு உருவாகும். குற்றங்கள் உருவாகும் வாய்ப்புக்களைத் தவிர்த்து, நலமிக்க ஒரு கலாச்சாரத்தை வளர்ப்பதே, ஒருங்கிணைப்புக்கு அவசியம்.

மனிதர்களை, குற்றம் இழைக்காமல் தடுப்பதும், அவர்களை மீண்டும் சமுதாயத்தோடு ஒருங்கிணைப்பதும் சிறைகளின் நோக்கம் என்று பல முறை கருதுகிறோம். ஒருவரை சிறைப்படுத்துவதால், சமுதாயப் பாதுகாப்பு உறுதி அடைவதில்லை மாறாக, அவர் வாழும் குடும்பம், சமுதாயம் இவற்றில் உள்ள பாதுகாப்பற்ற நிலையை நீக்குவதே, சமுதாயப் பாதுகாப்பை உறுதி செய்யும்.

பசித்தோர், தாகமாயிருப்போர், வீடற்றோர், சிறைப்பட்டோர் ஆகியோர் மீது இயேசு காட்டிய அக்கறை (காண்க. மத்தேயு 25:34-40) தந்தையாம் இறைவன் காட்டும் இரக்கத்தின் மையம். இதுவே எந்த ஒரு சமுதாயத்திற்கும் நன்னெறி அளவுகோலாக விளங்கவேண்டும். வறியோரை, நோயுற்றோரை, சிறைப்பட்டோரை ஒருங்கிணைத்துச் செல்லும் சமுதாயமே, அமைதியில் வாழ முடியும். அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி, மதிப்பு வழங்கும் வேலை வாய்ப்பு, சமுதாய ஈடுபாடு, அடிப்படை தேவைகளும், மருத்துவத் தேவைகளும் அனைவரையும் அடைதல் ஆகியவை, சமுதாய ஒருங்கிணைப்பை உறுதிசெய்யும்.

உங்களோடு இந்த இரக்கத்தின் யூபிலியைக் கொண்டாடுவதன் பொருள் என்னவெனில், கடந்த காலத்தில் சிறைப்படாமல், எதிர்காலத்திற்கு கதவுகளைத் திறந்து விடுவதும், மாற்றங்கள் வரும் என்று நம்புவதுமே இதன் பொருள்.

நடந்து முடிந்ததை மாற்றி எழுத முடியாது ஆனால், புதிய வரலாற்றை நாம் எழுத முடியும். பாவம், துயரம் இவற்றின் சக்தியை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்கள். உயிர்ப்பின் சக்தியையும், இறை இரக்கத்தின் சக்தியையும் நீங்கள் மறந்துவிடவில்லை.

இந்த சிறைக்குள் இருந்த வண்ணம், உங்களை ஒதுக்கி வைத்த சூழலை மாற்ற நீங்கள் முயற்சிசெய்யவேண்டும். உங்கள் அன்புக்குரியவர்களிடம் பேசுங்கள் வன்முறை வட்டத்தை உடைக்கும்படி அவர்களிடம் சொல்லுங்கள்.

மிகக் கொடூரமான வேதனைகளை அனுபவித்தவர்கள், சமுதாய வேதனைகளை நீக்கும் இறைவாக்கினராக மாற முடியும். மனிதர்களைப் பயன்படுத்தி, தூக்கியெறியும் சமுதாயம் இனியும் தொடரப்போவதில்லை என்பதை உங்கள் செயல்கள் வழியே சொல்லுங்கள்.

இந்த மையத்தில் பணியாற்றும் அனைவருக்கும் என் நன்றி. அவர்கள் செய்துவரும் பணியை இன்னும் ஆர்வமாகச் செய்வதற்கு அவர்களை உற்சாகப் படுத்துகிறேன். நீங்கள் அனைவருமே விண்ணகத்தந்தையின் இதயத்திற்கு சிறந்த அடையாளங்களாக வாழமுடியும் என்பதை மறவாதீர்கள்.

ஒரு நிமிடம் அமைதி காத்து ஒருவர், ஒருவருக்காகச் செபிப்போம். இறைவனின் இரக்கத்தில் அனைவரும் நம்பிக்கை கொள்ள செபிப்போம். எனக்காக செபிக்க மறவாதீர்கள்.

## ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் ஓர் அபூர்வ சந்திப்பு



கிறிஸ்தவ சரித்திரத்தில் கடந்த ஆயிரம் ஆண்டுகளில் இல்லாத வகையில், கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் ரஷ்ய மரபுவாத திருச்சபையின் தலைவரான பாட்ரியார்க் கிரில்லும் கியூபாவில் சந்தித்து பேசியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் குறித்து பேசப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவர்களிடையேயான சந்திப்பு, சித்தாந்த ரீதியில் பிளவுபட்டுள்ள கிறிஸ்தவ திருச்சபைகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஒரு திருப்புமுனையாக இருக்கும் என்று கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

கிறிஸ்தவ திருச்சபை பிளவுபடும், பின்னர் பிரிந்தவர்கள் கூடுவார்கள் என இயேசு கிறிஸ்து தனது கடைசி பிரார்த்தனைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தது இப்போது நடைபெறத் தொடங்கியுள்ளது. இந்தச் சந்திப்பை அவ்வாறு கருத முடியும் என்று அமெரிக்காவின் ஒரேகான் மாநிலம் போர்ட்லாந்திலுள்ள மல்ட்நோமா பல்கலைக்கழகத்தின் இறையியல் மற்றும் பரஸ்பர கலாச்சாரக் கற்கைகள் துறையின் பேராசிரியரும், திருச்சபை சரித்திரத்தில் தேர்ச்சி பெற்றவருமான கலாநிதி மார்ட்டின் அல்போன்ஸ் தெரிவித்துள்ளார்.

## அர்த்தம் இழந்துவிட்ட வலன்ரைன் தினம் அங்காடிப் பொருளாக மாறிவிட்ட அன்பு

இன்று காதலர் தினம் என்று கொண்டாடப்படும் வலன்ரைன் தினம் உருவான வரலாறு இது. உரோமையப் பேரரசில் பிப்ரவரி 14ம் தேதி, உரோமைய தேவர், தேவதைகளின் அரசியான ஜூனோ வின் திருநாள் கொண்டாடப்பட்டது. இந்தத் திருநாளைத் தொடரும் நாட்களில், இளம்பெண்களின் பெயர்களைச் சீட்டுக் குலுக்கிப் போட்டு, இளைஞர்கள் தெரிவு செய்வர். தெரிவு செய்யப்பட்ட இளம்பெண்ணும், இளைஞனும், நண்பர்கள் என்று அறிவிக்கப் படுவர். இப்படி ஆரம்பமாகும் நட்பு, பின்னர் காதலாகி, திருமண வாழ்வில் முடிவடையும்.

மூன்றாம் நூற்றாண்டில் இரண்டாம் கிளாவ்டியுஸ் மன்னனாய் இருந்தபோது, போரிடுவதற்கு ஆட்கள் சேர்ப்பது பெரும் கடினமாய் இருந்தது. இளைஞர்கள் தங்கள் காதலைத் துறந்து, இராணுவத்தில் சேர விரும்பவில்லை. எனவே, மன்னன் கிளாவ்டியுஸ், பிப்ரவரி 14ம்தேதி கொண்டாடப்பட்டத் திருநாளையும், அதைத் தொடரும் காதல், திருமணம் இவற்றையும் தன் பேரரசில் முற்றிலும் தடை செய்தான்.

அந்நேரத்தில் உரோம் நகரில் பணியாற்றி வந்த வலன்டைன் என்ற கத்தோலிக்க குருவானவர், அரசனுக்குத் தெரியாமல், பல இளையோருக்கு திருமணங்கள் நடத்திவைத்தார். இதை அறிந்த அரசன், அந்த குருவைக்கைது செய்து, சிறையிலடைத்து, சித்திரவதைகளுக்கு உள்ளாக்கினான். அருட்திரு வலன்டைன் அவர்கள், சிறையில் சித்திரவதைகள் அனுபவித்தபோது, சிறைக் காவலரின் பார்வையற்ற மகளைக் குணமாக்கினார் என்ற கதை ஒன்று உண்டு. 270ஆம் ஆண்டளவில், பிப்ரவரி 14ம் தேதி, அருட்தந்தை வாலன்டைன் அவர்கள், தலை வெட்டப்பட்டு, உயிர் துறந்தார்.

வெறியை வளர்க்கும் மன்னனின் அதிகாரத்தை எதிர்த்து, அன்பையும் காதலையும் வளர்க்க அருள்பணி வாலன்டைன் அவர்கள் செய்தது அழகான ஒரு முயற்சி. அந்த முயற்சியையும் அவர் பகிரங்கமாய் செய்திருக்கலாம். அவர் நினைத்திருந்தால், அவரது 'அன்புப் படை'யில் ஆயிரக்கணக்கான இளையோரைச் சேர்த்து போராடியிருக்கலாம். ('அன்புப் படை' என்பதே, ஒன்றோடொன்று பொருந்தாத சொற்றொடர்). போராட்டம், கலவரம் என்று வாலன்டைன் மன்னனை எதிர்த்திருந்தால், அந்த கலவரங்களில் பல உயிர்கள் பலியாகியிருக்கும். அன்பின் பெயரால் இந்தக் கொலைகளைச் செய்ய விரும்பாத அந்த அருள்பணியாளர் அமைதியாக, அரசனுக்குத் தெரியாமல் அன்பை வளர்த்துவந்தார். அற்புதங்கள் நடத்திவந்தார்.

உண்மை அன்பை வளர்க்க, அருள்பணி வாலன்டைன் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை ஓரந்தள்ளிவிட்டு, அவரது இறந்த நாளான பிப்ரவரி 14ம் தேதியை, 'வாலன்டைன் நாள்' அல்லது 'காதலர் தினம்' என்று பெயர் சூட்டி, அன்பை, அங்காடிப் பொருளாக மாற்றிவிட்டனர் வியாபாரிகள். வர்த்தக உலகத்தின் விளையாட்டிற்கு நம் இளையோர் பலியாகி வருவது, கசப்பான உண்மை.

## மெக்சிகோ நகரில் திருத்தந்தை பிரான்சிஸ்



ஹவானாவிலிருந்து மூன்று மணி நேரம் பயணம் செய்து, மெக்சிகோ நாட்டுத் தலைநகர், மெக்சிகோ நகர் பெனித்தோ வாரெஸ் பன்னாட்டு விமான நிலையத்தில் திருத்தந்தை சென்றிறங்கினார்.

விமான நிலையத்தில், மெக்சிகோ அரசுத்தலைவர், அவரின் மனைவியுடன் திருத்தந்தையை வரவேற்று சிவப்புக் கம்பளத்தில் நடந்து வந்தனர். மெக்சிகோ பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்ச்சி விமான நிலையத்தில் நடைபெற்றது. பல வகையான பாரம்பரிய இசைக் கருவிகளுடன், அந்நாட்டு மரபுத் தொப்பிகளை ஆண்க்ள் அணிந்துகொண்டும், பெண்கள் சிவப்புநிற ஆடைகளுடனும் நடனமாடி வரவேற்றனர்.

விமான நிலையத்திலிருந்து மெக்சிகோ நகர் திருப்பீடத் தூதரகத்திற்கு 19 கிலோ மீட்டர் தூரம் காரில் சென்றார் திருத்தந்தை. வழியெங்கும், மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள், மஞ்சள் கொடிகளை ஆட்டிக்கொண்டு நின்று மின்னும் ஒளிவிளக்குகளில் திருத்தந்தையைக் கண்டு மகிழ்ந்தனர். இதோ திருத்தந்தை செல்கிறார், திருத்தந்தையே, இந்த உலகம் முழுவதும் உம்மை அன்பு கூர்கின்றது என்று மக்கள் பாடிக்கொண்டு நின்றனர்.

இலத்தீன் அமெரிக்காவில் அதிகமான கத்தோலிக்கரைக் கொண்டுள்ள நாடு மெக்சிகோ என்பது இம்மக்களின் ஆரவாரத்தைக்கொண்டே அறிந்து கொள்ளலாம். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருப்பீடத் தூதரகத்தில் இரவு உணவருந்தி உறங்கச் செல்வதற்கு முன்னர், அந்த இடத்திற்கு முன்பாகக் கூடியிருந்த மக்களிடம், இந்த வார நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு உங்களுக்கு ஓய்வு தேவை என்று சொல்லி, அங்கிருந்த மக்கள் கொடுத்த இரண்டு வெள்ளை ரோஜாக்களைப் பெற்றுக்கொண்டார். பின்னர் அம்மக்களுடன் சேர்ந்து அருள் நிறைந்த மரியே என்ற செபத்தைச் சொன்னார். பின்னர் அவர்களிடம், அன்னை மரியாவைப் பார்த்து, நம்மை அன்பு கூர்பவர்கள், நாம் அன்பு கூர்பவர்கள், நமக்குப் பிடிக்காதவர்கள், நம்மைப் பிடிக்காதவர்கள், நம்மீது பொறாமைப்படுபவர்கள் ஆகியோரின் முகங்களை நினைவுகூருங்கள் என்று கூறினார்.

## புனித பூமித் தலத் திருச்சபைக்கு உதவுமாறு ஆயர்களுக்கு கடிதம்

புனித பூமித் தலத்திருஅவைக்கு உதவுமாறு உலகின் அனைத்து ஆயர்களுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார், கீழை வழிபாட்டு முறை பேராயத் தலைவர் கர்தினால் லெயோனார்தோ சாந்திரி.

புனித வெள்ளியன்று புனித பூமிக்காகத் திரட்டப்படும் நிதி, உதவிகள் அதிகம் தேவைப்படும் புலம்பெயர்ந்தவர்கள், அகதிகள், வயதானவர்கள், சிறார் மற்றும் நோயாளர்க்கு வழங்கப்படும் என்று, கர்தினால் சாந்திரி அவர்களின் கடிதம் கூறுகின்றது.

மேலும், உள்ளூர் திருத்தலங்களைப் பராமரிக்கவும், சிரியா மற்றும் ஈராக் நாடுகளின் புலம் பெயர்ந்த மக்களுக்கு, மேய்ப்புப் பணி, கல்வி, நல்வாழ்வுப்பணி மற்றும் சமூகநலப் பணிகளைப் பங்குத் தளங்கள் ஆற்றவும் இந்நிதி உதவும் என்றும் அக்கடிதம் கூறுகின்றது.

புனித பூமியில் மக்கள் இறந்து கொண்டிருக்கின்றனர், கடத்தப்பட்டு கொல்லப்படுகின்றனர். கட்டாயப் புலம்பெயர்வு காரணமாக, பிரிந்துள்ள குடும்பங்கள், தங்களின் குடும்ப உறுப்பினர்களுக்காகத் துன்பம் அனுபவிக்கின்றனர் என்றும், தனிமை, புரிந்து கொள்ளப்படாமை மற்றும் புறக்கணிக்கப் படுவோம் என்ற அச்சத்தின் பிடியில் அம்மக்கள் உள்ளனர் என்றும் கர்தினால் சாந்திரி அவர்கள் கூறியுள்ளார்.

புனித வெள்ளியன்று புனித பூமிக்காக ஆலயங்களில் திரட்டப்படும் நிதி, எருசலேம், பாலஸ்தீனம், இஸ்ரேல், ஜோர்டன், சைப்ரஸ், சிரியா, லெபனான், எகிப்து, எத்தியோப்பியா, எரித்ரியா, துருக்கி, ஈரான், ஈராக் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பப்படும் என்று சொல்லப் பட்டுள்ளது.

## தேவநிந்தனை சட்டத்தில் மாற்றம் வரும் பாகிஸ்தான் ஆயர் நம்பிக்கை

பாகிஸ்தானில் அண்மையில் இடம்பெற்றுவரும் நல்ல மாற்றங்களைக்காணும்போது, அந்நாட்டின் தேவ நிந்தனைச் சட்டத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றம் உருவாகும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளதென்று பாகிஸ்தான் கத்தோலிக்கத் தலைவர்கள் தெரிவித்துள் ளார்கள்.

பாகிஸ்தானின் தேவ நிந்தனைச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டு, அதன் அடிப்படையில், பலகிறிஸ்தவர்கள் சிறைத் தண்டனை பெற்றுள்ள நிலையில், அச்சட்டத்தைத் திருத்தி அமைக்க, சில இஸ்லாமியத் தலைவர்களே முன்வந்திருப்பது, நல்ல நம்பிக்கையைத் தருவதாக உள்ளது என்று, லாகூர் பேராயர் செபாஸ்டின் பிரான்சிஸ் ஷா அவர்கள் கூறினார்.

பாகிஸ்தானின் இஸ்லாமிய கருத்தியல் அவையின் தலைவர், முகம்மத் கான் ஷெரானி அவர்கள், தேவநிந்தனைச் சட்டத்தைத் திருத்தி அமைக்க முன்வந்திருப்பது, இச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதுடன், அப்பாவி மக்களின் வாழ்வைச் சிதைப்பதையும் தடைசெய்யும் என்றார், பேராயர் பிரான்சிஸ்ஷா.

## நான் நிம்மதியாக வாழ பணம் தடையாயிருக்கக் கூடாது

அந்த பணக்கார முதியவர் திடீரென தன் வழக்குரைஞரை அழைத்து, தன் சொத்தில் ஒரு சிறு வீட்டை மட்டும் விட்டுவிட்டு மீதியை எல்லாம் தன் நான்கு மகன்களுக்கும் சரி சமமாக பங்கிட்டுக் கொடுக்கச் சொன்னார். வழக்குரைஞருக்கு ஒன்றும் புரியவில்லை. அவர், 'ஐயா, இன்னும் நீங்கள் வாழ வேண்டிய காலம் நிறைய இருக்கிறது. உங்கள் பிள்ளைகளோ திருமணம் முடிந்து தனியாக சந்தோசமாகத்தானே வாழ்கிறார்கள். சொத்துப் பிரிக்க இப்போது என்ன அவசரம்? இப்போதே கொடுத்துவிட்டால், பிறகு உங்களை யாரும் கவனிக்க மாட்டார்கள்' என்று சொன்னார். உடனே அந்த பணக்கார முதியவர், 'நீங்கள் கூறுவதுபோல், நானும் இன்னும் நீண்ட காலம் வாழத்தான் ஆசைப்படுகிறேன். ஆனால், இந்தக் கிழவன் எப்போது சாவான், நமக்கு எப்போது சொத்து கிடைக்கும் என என் பிள்ளைகள் ஒவ்வொரு நாளும் என் சாவுக்காகக் காத்திருப்பதை நான் விரும்பவில்லை. சொத்தைப் பிரித்துவிட்டால், அவர்களும் என் சாவுக்காக காத்திருக்க மாட்டார்கள், நானும் என் சிறிய வீட்டில் பயமில்லாமல் நிம்மதியாக வாழ்ந்திருப்பேன்' என்றார்.

உண்மைதான். தேவைக்கு மீறியச் சொத்து என்பது, தைரியத்தைவிட, பயத்தையே மனதில் விதைக்கிறது.

# ஏமாற்றாதே...



# ஏமாறாதே ooo

**சிறுகதை**

**எஸ். ஞானேஸ்வரி**

சமையலறையிலிருந்து கம கம வென்ற மீன்குழம்பு வாசனை வாசல் வரை வந்து தூக்கியடித்தது. நிக்சனுக்கு ஆத்திரமாக வந்தது. அவன் ஒரு கல்லூரி மாணவனாக இருந்தாலும் பக்தி நிறைந்த இளைஞன். தவக் காலத்தைப் புனிதமாக அனுசரிக்க வேண்டும் என்றும், ஆண்டவரின் உடல் வதைக்கப்பட்டதால் இரத்தத்துடன் தொடர்புடைய எந்த உணவும் தவிர்க் கப்பட வேண்டும் என்றும் நினைப்பவன். விறு விறுவென்று சமையலறைக்குச் சென்றான். "ஏனம்மா... இந்தத் தவக்காலத்தில மீனை வீட்டுக்குள்ள கொண்டு வாறீங்கள்?...

"இது அப்பாவுக்கு... பாவம்... கஷ்டப்பட்டு உழைக்கிற மனுஷன். அவரால மீனோ... ஒரு துண்டு கருவாடோ... இருந்தால்தான் சாப்பிட முடியும்... சீனி வியாதிக்காரர். உனக்கென்ன... நீ மரக்கறியைச் சாப்பிடன்..." அம்மா பதிலளித்துக் கொண்டே வேலையைத் தொடர்ந்தாள்.

"சீ... மச்சம் சமைக்கிற சட்டிக் குள்ள மரக்கறியைச் சமைப்பீங்கள்... இந்த வீடு ஒரு புனிதமே இல்லாமல் போச்சுது... வெள்ளிக்கிழமையில கூடவா உங்கட புருஷனுக்கு வாய் கட்ட ஏலாது?..."

"தம்பி... எல்லாத்துக்கும் மனசுதான் காரணம்... அது தூய்மையாய் இருந் தால் போதும். மரக்கறிச் சாப்பாட் டுக்கு ஒரு வாய், ஒரு நாக்கு, மச்சச் சாப்பாட் டுக்கு ஒருவாய், ஒரு நாக்கு எண்டே ஆண்டவர் படைச்சிருக்கிறார். சட்டி பானையை வேறையாய் வச்சி என்ன செய்ய... எல்லாம் ஒரு வாய்க்குள்ள போய் ஒரு தொண்டையால தானே இறங்குது... அம்மா சிரித்தாள்.

"விதண்டாவாதமாய்க் கதையா தீங்கோ... நான் சாப்பிடுறதுக்கு மாமா வீட்டுக்குப் போறன்... ஈஸ்டர் மட்டும் நான் அங்கதான் சாப்பிடப்போறன்" கோபமாய்க் கூறியவாறு படி இறங் கினான். பை நிறைய மீனோ... முட்டை யோ வாங்கிக்கொண்டு எதிரில் வந்த அப்பாவைப் பார்க்கவே எரிச்சலாக வந்தது. "தவக்காலத்திலயாவது நாக்கை அடக்க வேண்டாமோ... அதுவும் இண்டைக்கு வெள்ளிக்கிழமை வேற... சே..."

மாமாவோடு உட்கார்ந்து மரக்கறிச் சாப்பாட்டைச் சாப்பிடுவது இவனுக்கு நிறைவாக இருந்தது.

சில நாட்களின் பின் கல்லூரியில் நடைபெறுகின்ற ஒரு விழாவுக்காக ஏற்பாடு செய்திருந்த உணவு வகைகளை வாங்குவதற்காக காலை 9 மணியளவில் தன் வகுப்புத் தோழனுடன் ஊரை விட்டுச் சற்றே ஒதுங்கியிருந்த அந்த ஹோட்டலுக்கு வரவேண்டியிருந்தது. பார்சல்கள் தயாராகும் வரையில் வேடிக்கை பார்த்தபடி நின்றான். அப்போது உள்ளே ஒரு மூலையில் உட்கார்ந்து ஒரு நபர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சிறு திடுக்கிடுதலோடு அவன் நன்றாக உற்றுப்பார்த்தான். மனம் பட படப்பாக இருந்தது. இருக்காது... சந்தேகத்தை நிவர்த்தி செய்ய மறை வாக சற்று நெருக்கமாக நின்று பார்த் தான். அது... அது... அவனுடைய நாற்பது நாள் உபவாச மாமாதான். சுடச்சுட மசால் தோசையை மிக ஆர்வமாக விழுங்கிக்கொண்டிருந்தார். மாமாவா... மாமாவா... இப்படி...

கள்ளத்தனமாய் சாப்பிட்டுக் கொண்டு... அவன் மனதுக்குள் பளிங்குக் கோட்டை கட்டி உட்கார்த்தி வைத்திருந்த ஓர் அழகான பிம்பம் விழுந்து நொறுங் கியது. ஏனோ அவனுக்கு அழுகை வந்தது. கடைசியில் உள்ள பையனிடம் விசாரித்தபோது "அவர் எங்களின்ர ரெகுலர் கஸ்டமர்" என்று வந்த பதிலில் ஆடிப் போனவனாக வெளியே வந்தான்.

அங்கு அப்பா ஒரு பையைத் தூக் கியபடி வாசலில் இறங்கிக்கொண் டிருந்தார். அவனுக்குத் தெரியும் அது நிறையச் சாப்பாட்டுப் பார்சல்கள் இருக்கும் என்று.

சில வருடங்களுக்கு முன்னர் பாஸ்கா காலத்தில் அவர்கள் குடும் பமாக தங்களுக்கு மிகவும் வேண்டிய ஒரு குருவானவரைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தனர். அவர் இவர்களுக்காக தேநீருக்கு ஏற்பாடு செய்ய முனைந்த போது அம்மா மிகவும் பெருமையாக நாங்கள் குடிக்க மாட்டம் பாதர். எல்லாரும் ஒரு சந்தி" என்றாள்.

"அப்பிடியே... ரொம்ப சந்தோசம்... ம்... சாப்பாட்டை ஆருக்குக் குடுக்கிறனீங்கள்?"

"சாப்பாடே.... சமைச்சால்தானே குடுக்க... எல்லாரும் விரதம். பிறகு ஏன் சமைக்க வேணும்.. இனி மத்தியானம் சமைச்சால் சரி பாதர்..." அம்மாவின் பதில் கேட்டு குருவானவர் சிரித்தார். "நீங்கள் எல்லாருமே... உபவாசம் இருப்பது நல்ல விசயந் தான்... ஆனால் இதால் ஆருக்காவது நன்மை கிடைக்குதா? உங்களுக்குத் தான் நன்மையைத் தேடுறீங்கள்... சிக்கனப்படுத்தி சேமிக்கிறீங்கள்... காலையில சமைக்காவிட்டால் அந்தப் பொருட்கள் எல்லாம் மிச்சந்தானே... ஒவ்வொரு முறை உபவாசம் இருக்கும் போதும் எவ்வளவோ மிச்சப்படுத்த முடியும்... என்னம்மா..." அம்மாவிட மிருந்து பதில் இல்லை.

"நாங்கள் இப்படித்தான் பாதர் உபவாசம் இருக்கிறனாங்கள்..." அப்பா முணுமுணுத்தார்.

"நீங்கள் மட்டுமில்ல.. நிறையப் பேர் இப்படித்தான் இருக்கினம்... நீங்கள் நோன்பு இருந்து பசியை உணரும்போது உங்களது உணவு பசியோடு இருக்கிற வயிறுகளை நிறைக்க வேணும். ஒரு வேளை உணவுக்கும் வழியில்லாத ஏழைகள், பிச்சைக்காரர், அங்கவீனருடைய பசியை உங்கள் உணவு ஆற்ற வேணும். அதுதான் ஆண்டவருக்கு விருப்பமாயி ருக்கும்.யோசிச்சிப் பாருங்கள்"

அன்று ஆரம்பித்த பழக்கம். யார் உபவாசம் இருந்தாலும் தங்கள் உணவைப் பார்சலாகக் கட்டி யாராவது பிச்சைக்காரருக்குக் கொடுத்து விடுவார் கள். இன்று வெள்ளிக்கிழமை... அதுதான் அப்பா நிறைய உணவுப் பொட்டலங்களோடு கிளம்பிவிட்டார்.

போலி வேஷம் போடும் மாமாவை விட தன் பலவீனத்தை மறைக்காமல் உண்மையாக இருக்கும் அப்பாவின் மீது அன்பு சுரந்தது.

பிச்சைக்காரர்களைத் தேடித்தேடி ஒவ்வொரு பொட்டலமாகக் கொடுத்த போது மனதுக்கு சந்தோசமும் நிறைவும் கிடைத்தது. படுத்துக்கிடந்த ஒரு வயதான பெரியவரை எழுப்பி அப்பா அவரருகே உட்கார்ந்து கனிவோடு சாப்பாட்டுப் பார்சலைப் பிரித்து உண்ணச் செய்தார். அதனுள்ளே இருந்த பண்டங்களைத் பார்த்து திகைத்துப்போய் நின்றான். மீன் துண்டுகளும் முட்டையும் வைக்கப்பட்டு வேறு பல கறிகளும் இருந்தன. அப்பா அதிகாலையிலேயே கறி வாங்கப் போவதும், அம்மா வக்கணையாகச் சமைப்பதும் இவர்களுக்காகத்தானா?...

திகைத்து நின்ற மகனின் மனதைப் படித்தவர் போல் அப்பா அவனைப் பார்த்து " நாங்கள் மரக்கறி உணவு உண்ணலாம்... ஆனால் இவைக்குக் குடுக்கிற உணவு நிறைந்த உணவாக இருந்தால்தானே நல்லது. பாவம்... ஏழைகள்... மீனோ... கருவாடோ இருந்தால்தானே அவை யாலயும் நல்லாச் சாப்பிட முடியும்."

அப்பாவின் பெருந்தன்மையை அறியாமல் கேவலமாக நினைத்து விட்டோமே என்று அவனுக்குக் கவலை யாக இருந்தது. வீட்டுக்குச் சென்றதும் அப்பா துண்டைத் தரையில் விரித்துக் கொண்டு படுத்து விட்டார். அவன் சாப்பிட உட்கார்ந்தபோது அப்பாவைத் தேடினான். "அவர் சாப்பிடமாட்டார் ராசா... இனி ராவைக்குத்தான். நீ சாப்பிடு.." அம்மாவின் பதிலில் அவனுக்கு எல்லாமே புரிந்தது.

## தவம் செய்ய தரிக்கதொரு பொற்காலம்

# 'தவக்காலம்'

**நான் உனக்காக இந்த பாரச்சிலுவையை சுமந்தேனே! நீ எனக்காக என்ன செய்தாய்....? உன் வாழ்வில் என்னை கண்டு – என்னில் நீ வாழ்ந்து பார்க்கின்றாயா...?**

இறைவன் கிறிஸ்தவ மக்களுக்காக தருகின்றதொரு பொற்காலம் "தபசுகாலம்" மனிதர்களாகிய எங்களுக்கு தபசுகாலம் தவமாக தருகின்ற மிகப்பெரிய பரிசு "மன மாற்றம்" உள்ளத்தின் உணர்வுகளோடு மனமாற்றமில்லாத வாழ்வு எங்களை "பாவம்" என்ற பாதைக்குள் பயணம் செய்ய அழைத்து மரணத்திற்கு இட்டுச் செல்லு கின்றது.

இறைவன் மனிதராகிய எங்களுக்கு ஒவ்வொரு நாளும், ஒவ் வொரு நிமிடமும், கடக்கும் வேளையிலும் இந்த மண்ணில் மறுபடியும் வாழ வைத்திருக்கின்றார் என்றால்..? எங்களுக்குள் மறு அவதாரம் கிடைத்திருக்கின்றது. மறு அவதாரம் கிடைத்திருக்கின்றது என்றால், மனிதராகிய நாங்கள் நடந்து வந்த பாதையை மறக்காமல் திரும்பி பார்க்க வேண்டும் என்பதற்காக, என்பதை ஒரு நாளும் மறந்து போய்விடக்கூடாது. அத்தகைய வாழ்வில் மனிதர்களாகிய நாம் உயிரோடு வாழும் போது, வாழ்வில் எப்படியும் வாழலாம் என்பது எமது மதக் கொள்கையல்ல. கிறிஸ்தவர்கள் இப்படி, இப்படி தான் வாழ வேண்டு மென்ற வாழ்வை வாழ எம்மை நாமே தயார் செய்து கொள்ள கிடைக்கின்ற அரியதொரு சந்தர்ப்பம் தான் தபசுகாலம்.

வாழ்வில் வாழும் போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் எமது



உள்ளத்தில் ஊடுருவும் மனச்சாட்சிக்கு மகுடம் சூட்டி, மனமாற்றம் அடைந்து ஆன்மிக விழுமியங்களில் மகிழ்ந்து உள்ளம் புத்துயிர் பெறுகின்றது என்றால் எமக்குள் "ஞானம்" பிறக்கின்றது என்பது பொருள். "ஞானம்" பிறக்கின்றது என்றால் எமது வாழ்வு புனிதம் நிறைந்து தெய்வீகத் தன்மை அடைகின்றது என்பதில் எந்தவித ஐயப்பாடும் கிடையாது.

அதுவே உண்மையான வாழ்வின் உச்ச நிலை என்பதை மறந்துவிடக் கூடாது. ஆனால் இன்றைய அவசரகால நவீன உலகப் போக்கில் வாழுகின்ற அரை குறை மனிதர்களின் இதயங்களில் வர, வர அன்பில்லை, பாசமில்லை, கருணை யில்லை பகிர்வு இல்லை, தியாகமில்லை, ஒறுத்தல் இல்லை, ஒற்றுமையில்லை, தவமில்லை. மனிதர்களாகிய எவரிடமா வது உதவியென்று கேட்டாலும் முதலில் வருகின்ற வார்த்தையே "இல்லை" என்ற வார்த்தைதான். இல்லை, இல்லை இல்லை!!! என்று எதற்கும் சொல்லி சொல்லியே வாய்ப்பாடு பாடமாக்குவது போல அவர்களின் வாழ்வே இல்லை என்ற வாழ்வாகிவிட்டது. கவலைக் குரியதே.

திரு. S.B. பீற்றர் போல்

## மீண்டும் புதியனவற்றை உருவாக்க நமக்குத் தரப்பட்டுள்ள

# தவக்காலம்



ம.பிரான்சிஸ்க்

**தவக்காலம் என்றால் என்ன?**

இறைவிருப்பத்தை வாழ்வில் ஏற்று அதன் படி வாழ்ந்து கடவுளோடும் மனிதரோடும் ஒப்புரவாவதற்கான காலமே தவக்காலமாகும். நாம் அனை வரும் மீண்டும் ஒருமுறை எம் ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தி வலுப்படுத்தி வளப்படுத்த வல்லதேவன் தரும் காலம் என்று உறுதியாகக் கூறலாம். தவக் காலத்தின் தொடக்க நாளான புதனை முன்பு விபூதிப் புதன் என்றும் தற்போது திருநீற்றுப் புதன்-சாம்பல் புதன் என்றும் கத்தோலிக்கர் அழைப்பர்.

**திருநீற்றுப் புதன் ஏன் மாறி மாறி வருகிறது?**

பொதுவான கிரகோரியன் கிறித்தவ நாட்காட்டிப்படி, அன்று இயேசுவின் உயிர்த்தெழுதல் ஒவ்வொரு ஆண்டும் நிலையான திகதியில் இல்லாது மாறி மாறி கொண்டாடப்பட்டது. ஏனென்றால் பங்குனி மாதம் வருகின்ற முழுநிலா நாளையொட்டி வருகின்ற ஞாயிறு இவ்விழா கொண்டாடப்பட்டது. இது பண் டைய யூத மரபுப்படி அமைந்த பாஸ்கா விழா கணிப்பை அடிப்படையாகக் கொண் டது. எனவே, திருநீற்றுப் புதன் மாசி 4ஆம் நாளிலிருந்து பங்குனி 10ஆம் நாள் வரை ஏதாவது ஒரு புதனன்று வரலாம். அதாவது ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் 21ஆம் திகதிக்கு பின்வரும் பௌர்ணமிக்கு அடுத்து வரும் ஞாயிறுக்கிழமை தான் ஈஸ்டர் கொண்டாடப்பட்டது. 21ஆம் திகதியே பௌர்ணமி ஞாயிறு வந்தால் அடுத்த ஞாயிறு கொண்டாடுவர்கள். இதனால் திருநீற்றுப் புதனும் மாறி மாறி வருகிறது.

**தவக்காலம் எத்தனை நாட்கள் கொண்டது?**

இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவுடன் முடிவடையும் இத்தவக்காலம் நாற்பது நாட்களை கொண்டது. திருநீற்றுப் புதனி லிருந்து 47ஆம் நாளில் இயேசுவின் உயிர்த்தெழுதல் விழா கொண்டாடப் படுகிறது. ஆண்டவரின் நாள் என அழைக்கப்படும் ஞாயிற்றுக்கிழமைகளை தவிர்த்து தவக் கலம நாற்பது நாட்கள் கொண்டது. தவக்காலத்தினுள் வருகின்ற ஞாயிற்றுக் கிழமைகளில் தவ முயற்சிகளைக் கடைப் பிடிப்பது வழக்கமல்ல. ஞாயிற்றுக்கிழமை இயேசு உயிர்பெற்றெழுந்த நாள் ஆதலால் மகிழ்ச்சி நாள். நோன்பு நாளல்ல என்பது கிறிஸ்தவர் கருத்து.

**தவக்காலம் தீமையை நன்மையால் வெல்லும் காலம**

"நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" என்று திருநீற்றுப் புதனன்று கத்தோலிக்கத் திருவழிபாட்டில் பயன்படுத்தப் படும் வார்த்தைகளை மையப்படுத்தி சிந்தித் தால் இந்த பைபிள் வார்த்தைகள் நம்மில் நம்பிக்கையற்ற ஒரு நிலையை உருவாக் குவதற்குப் பதில், நமது நிலையற்ற தன்மையையும், அதனை மாற்றவல்ல இறை வனின் அருகாமையையும் நமக்குணர்த்து வதை நாம் காண முடியும்.

**உறவை புதுப்பிக்க வருவதே இத்தவக்காலம்**

இறை மனித உறவை புதுப்பித்து கொள்ள மனிதனுக்கும் இறைவனுக்கு மிடையே உரையாடல் செய்ய நம்மை அழைக்கின்றது இக்காலம். நமது வாழ்வில் பல்வேறு வழிகளில நம்மோடு உறவாடிய இறைவன் - இக்காலத்தில் தன் பாடுகளின் வழியாக நம்மோடு அவர் கொண்டுள்ள அன்பை- உறவை உறுதிபடுத்த நமக்கு அழைப்பு விடுக்கின்ற காலம். இறைவாக்கினர்கள் வழியாக பேசிய இறைவன் நீதி தலைவர்-அரசர்கள் வழியாக செயற்பட்டு தொடர்ந் தும் மனித இனத்தின் இடறிய பாதையைச் சமன் செய்து அன்புறவை கட்டியெழுப்ப இறுதியாக அன்னைமரி வழியாக தன் அன்பு மகனை மனிதரிடம் தந்தார். தவக்காலம் உறவை வளர்க்க நமக்கு தரப்படும் அற்புதமான காலமாகும். நல்ல ஆரோக்கியமுள்ள சமூகத்தை கட்டி யெழுப்புவதில் அக்கறை கொள்வோம். உறவிலே இறைவனை உயிர்ப்பிக்கச் செய்து. தெய்வ தரிசனம் பெறுவோம்.

---

# உள மாற்றமே உண்மை மாற்றம் தவிர்க்க முடியாத மாற்றம்



**தொழில்நுட்பத்தால் விளைந்த தீமைகள**

நவீன தொழில்நுட்ப பயன்பாட்டினால் நன்மைகள் நிறையவே விளைந்திருப்பினும் பல்வேறுபட்ட தீமைகளும் இன்று மலிந்து வருவதை கவலையோடு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. நவீன தொழில்நுட்பங்களின் தவறான பயன்பாட் டினால் வன்செயல்களும், வன்முறைகளும், துஷ்பிரயோகங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டும் செல்கின்றன. எனவே, நவீன தொழில்நுட்பத்தின் பயன் பாடுகளுக்கு அப்பால் அதிகரித்துவரும் தீமைகளைப் பற்றியும் விழிப்பாயிருக்க வேண்டி இருக்கிறது.

அண்மையில் வெளிநாடு ஒன்றில் வசிக்கும் கணவனும் ஈழத்தில் வாழும் மனைவியும் 'Skype' இல் உரையாடிக் கொண்டு இருந்திருக்கிறார்கள். இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறால் கணவன் 'Skype' இல் பார்த்துக்கொண்டு இருக்கக் கூடியதாகவே மனைவி தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளாள். இச் சம்பவம் தைத்திங்கள் 2014இல் நடந்ததை பத்திரிகைகளும் சுட்டிக்காட்டி இருந்தன.

இவ்வாண்டு மாசித்திங்கள் முதல் வாரத்தில் குருநாகலில் மேற்சொன்னதைப் போன்ற சம்பவம் ஒன்று நடந்திருக்கிறது. பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவி ஒருத்தியின் 'Facebook' இல் அவளது படம் அவளின் காதலன் எனச் சந்தேகிக்கப்படும் இளைஞனுடன் போடப்பட்டு இருந்ததாக இம்மாணவியின் பாடசாலை அதிபர் அவளைப பகிரங்கமாக எச்சரித்துவிட்டு அவளின் பெற் றோரை மறுநாள் பாடசாலைக்கு அழைத்து வரச் சொல்லியிருக்கிறார்.

வீடு சென்ற அம் மாணவி பெற்றோருக்கு நடந்ததைத் தெரிவிக்காமல் அறைக்குள் சென்று கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டு சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டாள். காலியிலும் 19 வயது சிறுமி தற்கொலை செய்துகொண்டுள்ளாள். நவீன தொழில் நுட்பப் பயன்பாட்டால் நாளும் பொழுதும் நடைபெறும் மிகச் சோகமான – மிகத் துக்கமான – மிக வேதனையான சம்பவங்களுக்கு இவை ஒருசில மாதிரிகளே!

ஆக, எத்தகைய மாற்றம் சமுதாயத்தில் நிகழ்ந்திருக்கிறது என்பதை இறையிய லாளன் செபஸ்தியான் காப்பன் பின்வருமாறு அவதானிக்கிறார்: "காசே நமது தெய்வம் ஆகிவிட்டது; கடைகளும் சந்தைகளுமே நம் கோவில் ஆகிவிட்டன; புதுப்புது சொகுசுகளையும் சுகங்களையும் வாங்கி அனுபவிப்பதே நமது வழிபாடு ஆகிவிட்டது. விளம்பரங்களைப் பார்ப்பதே நம் காட்சித் தியானம்; அடுத்து என்ன பொருளை வாங்கலாம் என்பதே செபம்; போட்டி பொறாமையும் விருப்பு வெறுப்பும் சண்டை சச்சரவுமே நமது வாழ்க்கை முறை யாகி வருகின்றன" என்று சமூதாயத்தில் நிகழும் பாதகமான மாற்றங்களை அவதானிக் கிறார்.

**நாம் நமக்கிடையில் அன்னியர் ஆகிவிட்டோமா?**

இன்றைய நவீன தொழில்நுட்ப பயன்பாட் டினால் தொடர்புகள் வளர்ந்திருக்கின்றன. ஆனால், உண்மையான உறவுகள் வளர்ந்திருக்கின்றனவா? என்றால் அது ஆய்வுக்கு உரியதே! எமக்கு அயலில் உள்ள வர்களே அன்னியப்பட்டுப்போய் கிடக்கின்ற அவல நிலையே உருவாகி வருகிறது. அடுத்த தெருவில் இருப்பவரோடு கைத்தொலை பேசியிலும் அடுத்தறையில் இருப்பாரோடு SMS இலும் செய்திகளைப் பரிமாறிவிட்டு "செய்திப் பரிமாற்றம் செய்கின்ற நவீன றோபோ'கள்"ஆக நாம் மாறிவருவதை மனவேதனையோடு எண்ணிப்பார்க்க வேண்டி இருக்கிறது.

எம்மோடு கூட வாழ்பவர்களும் எம் அருகில் இருப்பவர்களும் அன்னியப்பட்டுக்கிடப்பதை ஏன் நாம் இன்னும் உணரவில்லை? அயல்வீட்டில் யார் இருக்கிறார்கள் என்றுகூடத் தெரியாமல் எப்படி அடுத்தவரை நாம் அன்புசெய்ய முடியும்? ஆகவே, இத்தகைய 'அன்னிய வாழ்க்கை முறையிலிருந்து விடுபட்டு மனிதர்களை நேசிக்கும் உண்மை மனிதர்களாக வேண்டும். 'பிறர் நமக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நாமும் அவர்களுக்குச் செய்யும்' மனப்பாங்கு, வாழ்க்கை முறையாக மாற ஒவ்வொரு மனிதனிலும் அடைப்படையான மன(அக)மாற்றம் தேவைப்படுகிறது.

'எல்லாரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களே தவிர தங்களை மாற்ற யாரும் தாயாரில்லை' என்பது எவ்வளவு உண்மையானது என்பதை எம் வாழ்வில் நாம் கட்டாயமாகப் புரிந்துகொள்ளவேண்டி இருக்கிறது. ஏனெனில், "தனிமனித மாற்றம் என்பது சமூகமாற்றத்திற்கு சமாந்தரமாக நடைபெற வேண்டிய தவிர்க்க முடியாத அவசியமான தொரு செயற்பாடு ஆகும்" என எழுத்தாளர் மீராபாரதி கூறுவார்.

**யாருக்குத் தேவை மனமாற்றம்?**

பொதுவாக, அடுத்திருப்பவன்/அயலான் திருந்தவேண்டும் - மனம் மாற வேண்டும் என நினைக்கிறோமே தவிர 'நான் மாறவேண்டும்', 'எனக்குள் (என்னில்) மாற்றம் தேவை' என எண்ணுபவர்கள் மிகக்குறைவு என்பதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டியிருகின்றது. ஆகவேதான், "காலம் கனிந்துவிட்டது, கடவுள் ஆட்சி நெருங்கி வந்துவிட்டது, மனம்மாறி நற்செய்திகைய நம்புங்கள்..." என்ற மாற்கு1:15ல் குறிப்பிடப்படும் இயேசுவின் முதல் வார்த்தைகளானவை மனமாற்றத்திற்கான அழைப்பாக இருப்பதைப் பாாக்கலாம். ஆக, இயேசு மனிதர்களை ஒப்புரவாக்கும், மனங்களைத் துப்பரவாக்கும் பணிக்காகவே வந்தார் என்பதை அவரின் போதனைகளில் இருந்து புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

**அக மாற்றம் அவசியமானது**

மனமாற்றம் என்ற சொல்லுக்கு கிரேக்க மொழியில் பயன்படுத்தப்படும் 'மெற்ற நொய்யா' (Metanoia) என்ற சொல்லானது 'தீமையி லிருந்து விலகி கடவுளை முழுமையாக ஏற்றுக்கொண்டு வாழும் மனநிலை' எனக் கருதப்படுகிறது. அதாவது ஒருவரின் எண் ணத்தில், சொல்லில், செயலில், நடத்தையில் ஏன் முழு மனிதத்திலும் ஏற்படும் நேர்மறை மாற்றமே உண்மையான மனமாற்றம் என்பதே இச்சொல் குறித்துக்காட்டும் பொருள் எனப் புரிந்துகொள்ளலாம்.

எனவேதான், "நீங்கள் உங்கள் உடைகளை அல்ல உங்கள் உள்ளங்களை கிழித்துக் கொள்ளுங்கள்..." என்ற யோவேலின 2:13 வார்த்தைகள் புற(வெளி) மாற்றங்களைத் தவிர்த்து அக(உள்) மாற்றங்களை நம் வாழ்வினில் ஏற்படுத்த அழைக்கின்றன.

செ.அன்புராசா அமதி

# ஏழ்மையும் எளிமையுமான வாழ்வு வாழ்ந்த புனித பிரான்சிஸ் அசிசியார்

## மூன்றாம் சபை பொதுநிலையினர் கூட்டத்தில் சகோதரர் தொபியாஸ்

புனித பிரான்சிஸ் அசிசியாரின் மூன்றாம் பொதுநிலையினரின் முதல் கூட்டம் கடந்த 30.01.2016 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் ஆசனக்கோவில் ஞானப்பிரகாசியார் மண்டபத்தில் இடம்பெற்றது.

தலைவர் நிக்லஸ் பப்பா அவர்களின் வழிநடத்தலோடு ஆரம்பமாகிய மேற்படி சபைக்கூட்டத்திற்கு அருட்சகோதரர். செ.தொபியாஸ் CMSF சமூகமளித்திருந்தார்.

இறைத் தொழுகை நாளாந்த செபங்கள் சகோ. புஷ்பசீலி ஜோர்ஜ் அவர்களால் தொடக்கிச் சொல்லப் பட்டது.

தொடர்ந்து அருட்சகோதரர் செ.தொபியாஸ் அவர்கள் சபையினருக்கு அருளுரையாற்றினார்.

அவர் கூறியது இன்று நான் மிகவும் மகிழ்ச்சியாய் இருக்கின்றேன். காரணம் நான் அசிசியார் சபையில் இணைந்து நாற்பது வருடங்களை நிறைவு செய்துள்ளேன்.

எனது பணிவாழ்வில் பலவித சவால்களை எதிர் நீச்சல் போட்டு இன்று மிக மனநிறைவுடன் அசிசியாரின் வாழ்வுக்கு சாட்சியம் கூறி நிற்கின்றேன்.

பல மறை மாவட்டங்களில் நான் பணியாற்றியுள்ளேன். இருந்தாலும் எனது பணி வாழ்வில் மறக்க முடியாத ஒரு நிகழ்வை நான் இந்நேரத்தில் உங்களுக்குக் கூற விரும்புகின்றேன்.

அந்த நாட்களில் இலங்கையில் மட்டக்களப்பு குருக்கள் மடம் என்னும் கிராமத்தில் புனித அசிசியாருக்கு ஒரு சிறிய கோவில் மாத்திரம் இருந்தது. அந்தக் கிராமத்து மக்களால் ஆதரிக்கப்பட்டு வந்தது.

இதே நேரத்தில் எனது மனதிலே அக்கோவிலை புனரமைத்து பெரிய கோவிலாகக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற ஆதங்கம் உருவானது.

இந்நிலையில் 2011ஆம் ஆண்டு அவ்வூரில் ஓய்வு பெற்ற ஆசிரியர் இருந்தார். அவர் பெயர் த.அருளப்பு வயது 87. அவ்வாசிரியர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சுயநினைவற்று மரணத்தின் வாசலில் வைத்தியர்களினால் கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் போது அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

நான் அவரது கட்டிலருகே சென்றேன். அவருக்காக செபித்தேன், மன்றாடினேன். பின் குனிந்து அவர் காதுக்குள் "நான் அசிசியாருக்குக் கோவில் கட்டுவேன்" என்ற இவ் வார்த்தையை மும்முறை கூறி நிமிர்ந்தேன். இதுதான் நான் அவருக்குச் செய்தது.

ஆனால் யாருமே எதிர்பார்க்காத மட்டில் கூடிய சீக்கிரமே சுகம் பெற்று இன்றுவரை உயிருடன் இருக்கிறார்.

அது மட்டுமின்றி உடனே தானே அக்கோவில் புனருத் தானத்திற்கு தேவையான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டு இன்று அக்கோவில் ஒரு பெரிய கோவிலாக அவ்வூர் மக்களால் போற்றப்பட்டு வருகின்றது.

மற்றுமொரு செய்தியாக புனித பிரான்சிஸ் அசிசியாரின் வாழ்வைப் பற்றி ஒருவர் கூறிய போது கத்தோலிக்கத் திருச்சபையின் எல்லாப் புனிதர்களின் வரலாறுகளை நான் படித்துள்ளேன். அவற்றுள் புனித பிரான்சிஸ் அசிசியாரின் வாழ்கை வரலாறு தான் எனது மனதைத் தொட்டதாகும் என்றும் அவர் ஏழ்மையும் எளிமையுமான வாழ்வை வாழ்ந்து காட்டிய புனிதராவார் என்றும் அவர் பெருமிதத்துடன் கூறுவதை நாம் அறிவோம் என்றும் அருட்சகோதரர் கூறினார். எமது திருச்சபை தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வாண்டை இறை இரக்கத்தின் ஆண்டாக பிரகடனப்படுத்தி இறை மக்கள் அனைவரும் புனித பிரான்சிஸ் அசிசியாரின் தனித்தன்மை வாய்ந்த பண்புகளை பின்பற்றி வாழ அழைக்கின்றார் என்றும் கூறினார்.



தொடர்ந்து கூட்ட முடிவில் மூன்றாம் சபை அங்கத்தவர் அனைவரையும் இரக்கத்தின் கதவு வாசல் முன்பு ஒன்றுகூட்டி குழுப்புகைப்படம் எடுக்கப்பட்டது.

- திருமதி -
**புனிதம் அருளானந்தம்**

---

# இரக்கம் வெளிப்பட அக யாத்திரையே தேவை!

- அனலும் கனலும் 3

இன்று திருத்தல யாத்திரைகள் மக்களின் ஆன்மீக வாழ்விற்கு உறுதுணையாக அமைகின்றன. மகிமை பெற்ற திருத்தலங்களுக்குச் சென்று ஆசீரும் அருளும் பெற்றுத் திரும்புவதும் உண்டு. இன்றைய திருத்தல யாத்திரைகள் எம் வாழ்வை புதுப்பிப்பதற்கான யாத்திரையாக அமைய வேண்டும். மனமாற்றத்தை மையப்படுத்தியதாக அமைகின்றபோதே நாம் பயன்பெற முடியும். சில வேளைகளில் சுற்றுலாப் பயணமாக, பொழுதுபோக்காக சிலருக்கு அமைவதுண்டு. திரு யாத்திரைகள் ஆன்மீக வாழ்வின் வளர்ச்சிக்கு, மாற்றத்திற்கான வழிகாட்டல்களை தரக்கூடியன. நாம் இன்று வாழும் வாழ்வைச் சீர்தூக்கி பார்த்து மனமாற்றத்திற்கான அருளைப் இறைவனிடமிருந்து பெறும் காலமாகவும் திருயாத்திரைகள் அமையலாம்.

### தூய கதவினூடான யாத்திரை எதற்காக?

இறை இரக்கத்தின் யூபிலி ஆண்டை திருத்தந்தை தூய கதவை (Holy Door) தூய இராயப்பர் பசிலிக்காவில் கடந்த ஆண்டு மார்கழி மாதம் 8ம் திகதி திறந்து வைத்து தொடங்கி வைத்தார். அத்துடன் எல்லா மறை மாவட்டங்களிலும் அனைத்துலக ரீதியாக பேராலயங்களில் தூய கதவு திறக்கப்பட்டு இறைவனின் இரக்கத்தை அனைவரும் பெற்று இறைவனோடும் அடுத்திருப்பவரோடும் ஒப்புரவாகுமாறு அறைகூவல் விடுத்துள்ளார். தூய கதவினூடாக பயணம் செய்து இறைவேண்டலிலும், ஒப்புரவு அருட்சாதனத்திலும் இறைவனின் இரக்கத்தை அனுபவித்து இறைமக்கள் பரிபூரண பலன்களை பெற்று ஆன்மீக வாழ்விலும், சமூகவாழ்விலும் எழுச்சிகாணும் படியாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இயேசு தன்னை 'வாயிலாக' அடையாளப்படுத்தியுள்ளதை நற்செய்தி கூறுகின்றது.(யோவா 10/07) புனித 2ம் அருளப்பர் சின்னப்பர் தூய கதவைப்பற்றி கூறும் போது "பாவத்திலிருந்து அருள் வாழ்விற்கு ஒவ்வொரு கிறிஸ்தவனும் நுழைவதை" குறிக்கின்றது என்பார். தந்தையாகிய கடவுளிடம் வரும் ஒரேயொரு வாயில் இயேசு என்பது இங்கு அடையாளப்படுத்தப்படு கின்றது. எனவே இறைவனோடு ஒன்றிப்பதற்கும் ஒரேயொரு வாயிலாக இருப்பது இயேசுக் கிறிஸ்துவாகிய மீட்பர் என்பதையே தூய கதவு நினைவுபடுத்துகின்றது. இறை இரக்கம் வெளிப்பட்டதும் தந்தையிடம் செல்வதற்கான வாயிலாக விளங்கும் கிறிஸ்துவால் தான் என்றால் மிகையாகாது. தூய கதவால் நுழைவது என்பது உலகிலிருந்து கடவுளின் பிரசன்னத்திற்குள் நுழைவதையும் கோடிட்டு காட்டுகின்றது. இறை இரக்கத்தின் யூபிலி ஆண்டில் இயேசு கிறிஸ்து வழியாக அவருடைய நிறைவான அருளை வழங்கும் வாயிலாகவே தூய கதவு கருதப்படுகின்றது. தூய கதவினூடாக நாம் செல்லும் போது தடைகள் இல்லாமல் பயணிப்பது இறைவனையும் எம்மையும் பிரிக்கும் தடைகளிலிருந்து நீங்கி வாழ்வது தான் இறை இரக்கத்தின் யூபிலி ஆண்டின் நோக்கமாக அமைகின்றது. தூய கதவினூடாக பயணிக்கும் திருயாத்திரையானது இறைவனின் இரக்கத்தின் நுழைவாயிலாகவும் இறைவ னோடும், அடுத்திருப்பவரோடும் ஒன்றிக்கும் வாயிலாகவும் அமைய வேண்டும். எனவே தூயகதவை நோக்கி பயணம் செய்யும் திருயாத்திரை பலன் கொடுக்க மனமாற்றம் இன்றியமையாதது.

### எம் இதயக்கதவுகள் திறக்க வேண்டும்.

திருயாத்திரை என்பது இறைவனை நோக்கிய பயணமாகும். இறைவனின் இரக்கத்தை ஆழமாக அனுபவிக்க இறையருள் தேவை. தினம் தோறும் நமது விசுவாச வாழ்வின் பயணத்தில் இறைவனை முதன்மைப்படுத்தி அவரில் சரணடைந்து வாழ்க்கை முறையின் மூலமாகவே அகயாத்திரையை மேற்கொள்ள முடியும். இறைவனுக்குள் இறை வார்த்தைக்குள் வாழுகின்ற போது தான் இறைவனின் பண்புகள் நமக்குள் உள்வாங்கப்படுகின்றன. முன்பெல்லாம் வீடுகளுக்கு இரு வாசல்கள் வைப்பார்கள். இப்போது கள்வர்களின் பயத்தினால் ஒரு வாசல் இருப்பது நல்லது. ஒரு வாசலால் நல்லதை உள்வாங்கி மறுவாசலால் தீயதை வெளியே அனுப்பிவிடலாம். தூய கதவு எமக்காக திறந்துள்ளது. எம் இதயக் கதவுகள் திறப்பது எப்போது? இறைவன் நமது இதயக்கதவை தட்டிக் கொண்டே காத்திருக்கின்றார். வீட்டில் நாம் கூட்டுகின்ற குப்பையைக் கூட ஒரு மூலையில் போட்டு எரித்து விடுகின்றோம் ஆனால் எம் நடு வீட்டிலே, அதாவது நம் இதயத்தில்தான் முழுக்குப்பையையுமே போட்டு வைத்திருக்கின்றோம். இதயக்கதவுகளை இறைவனுக்காக திறக்காதவரை நாம் இறையிரக்கத்தை உண்மையாக அனுபவிக்க முடியாது. இறை இரக்கத்தை நம் உள்ளங்களில் அனுபவிக்காதவரை அடுத்திருப்பவருக்கு நாம் இரக்கத்தை வெளிப்படுத்த முடியாது. இத்தகைய ஒரு ஆழமான இறை அனுபவத்திற்கு நாம் நீண்ட யாத்திரை இறைவனை நோக்கி செய்ய வேண்டியவர்களாய் உள்ளோம். நாங்கள் ஆன்மீக வாழ்க்கையில் பெரும்பாலும் எல்லையில் (Periphery) தான் நிற்கின்றோம்.

### சொகுசான ஆன்மீக மாயையிலிருந்து விடுபடல்

உண்மையான திருயாத்திரை அகயாத்திரை என்பதில் இருகருத்து இருக்க முடியாது. தூய கதவால் நுழைந்து திருப்பலியில் பங்கெடுத்து, ஒப்புரவு அருட்சாதனத்தை பெற்று பரிபூரண பலன்களுடன் திரும்புவது இறை இரக்க ஆண்டின் செயற்பாடுகளில் ஒன்றாகும். இது ஒரு நீண்ட செயற்பாடே. இது தினம் தோறும் செயற்படுத்த வேண்டிய ஒரு நிலைத்து நிற்கக் கூடிய செயற்பாடாகும். குறிப்பாக ஆன்மீகத்தை இன்று நாம் இலகுவான, சொகுசான முறையில் வரையறுத்து வாழ்கின்றோம். பக்தி முயற்சிகள் திருவிழாக்கள், இன்னும் சில ஆலயக் கடமைகள், நேர்த்திகளோடு கிறிஸ்தவம் இன்று பெரும்பாலும் இப்படித்தான் வாழப்படுகின்றது. பக்தியைக் கடந்து ஒரு நிலையான ஆன்மீகத்தை நோக்கி பயணிக்க குடும்பங்களில் இறை வார்த்தை, செபம், பிறரன்பு வாழ்வு தேவைப் படுகின்றது. இறை சித்தத்தை முதன்மைப்படுத்தி, இறைவனை மையப்படுத்தி வாழும் முறைக்கு திரும்பும் போது தான் ஆன்மீக வாழ்வில் வளர்ச்சி காணுகின்றோம். தினம் தோறும் இறை பிரசன்னத்தில் வாழுவதுதான் முக்கியமானது. இன்றைய நிலைமைகள் வேறுவிதமாக இருக்கின்றன. ஆலயத்திற்கு சென்று மனம் விரும்புவதையெல்லாம் செய்து நாம் சமூகத்தில், குடும்பத்தில் வாழுகின்ற போது அது அகயாத்திரையாக அமைய முடியாது. எங்களுக்குள்ளேயே களையெடுப்புத் தேவை; இதயத்திலிருக்கும் தீமைகளை, ஆசைகளை ஊனியல்பின் நாட்டங்களை வெளியேற்றாமல் திருயாத்திரைகளும், பக்தி முயற்சிகளும் மேற்கொள்வதால் மட்டும் எதுவுமே ஆன்மீக வாழ்வில் நடக்கப் போவதில்லை. ஆலயத்தில் கும்பிட்டுவிட்டு வெளியே வந்து அடுத்திருப்பவனை கும்பிட கும்பிட அடிப்பது, துன்புறுத்துவது, அடுத்தவர் மட்டில் இரக்கமில்லாமல் வாழ்வது ஒரு போதும் கிறிஸ்தவமாகாது! கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவம் தான் எமது இன்றைய வாழ்க்கையா?...

**அருட்பணி ஸ்ரனி அன்ரனி அமதி**

(கனல் பறக்கும்)

# IN MEMORIAM



| Born | Died |
|---|---|
| 12 – 11 – 1942 | 15 – 01 – 2016 |

## Mr. Eugene Mariampillai

LL.B, (Ceylon)
ATTORNEY - AT-LAW

In Fond Memory of my friend and batch mate, at the Law Faculty, Colombo University; also a Patrician; a Human Rights Lawyer, until His Eternal Rewa rd; on Pongal Festival Day; 2016.

Passayoor, Jaffna,
Sri Lanka.

Fondly Remembered by,
Attorney-At-Law, T.M.Anthonipillai

Advt-10/16

---

## அமரர்
## தே. இராக்கினிதேவி

இரக்கத்தின் ஒளி
இவ்வுலகில் ஒளிர
இறையேசுவின் அன்பு
இவ்வுலகை அரவணைக்க
இம்மை வாழ்வின் நற்செயல்களை
இறை பாதத்தில் படைத்து
இருதய ஆண்டவரின் இரக்கத்தைச் சுவைக்க
இறை அன்பனை நேரல் சந்தித்து அனுபவிக்க
இராக்கினி தேவி 08.02.2016ல்
இறைபாதம் அடைந்ததை நினைவு கூர்ந்து
இரக்கத்தின் இறைவனின்
இறை பிரசன்னத்தை சுவைக்க
இரங்கி நிற்கின்றோம்.



அன்புச் சகோதரர்கள், தேவநேசராணி, மரியநாயகம், பற்றிமாநாயகி, ஜோட்ஸ் கிங், ஜோட்ஸ் டியூக், பெறாமக்கள் உறவினர்கள்.

Advt-13/16

---

## விண்ணக வாழ்வின்
## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 19 – 03 – 1950 | 22 – 02 – 2015 |

### அமரர்
### கிறிஸ்சோஸ்ரோம் யோசவ்

"படைகளின் ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது" (தி.பா. 84:01)

ஆண்டொன்று திங்கள் ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஓய்வற்ற உந்தன் உதர உழைப்பால்
வேர்விட்ட விழுதுகள் நாம் நின் ஆன்மா
இறையடியில் இளைப்பாற
இரக்கத்தின் ஆண்டவரை இறைஞ்சி
வேண்டுகின்றோம்.

32/8, அச்சக வீதி
யாழ்ப்பாணம்.

என்றும் இவரின்
அன்பு நினைவுகளோடு
குடும்பத்தினர்.

Advt-11/16

---

## 31ம் நாள் நினைவுகளில்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 08 – 11 – 1968 | 13 – 01 – 2016 |



வாழ்வின் துன்பங்களை சிலுவையாக ஏற்று மூன்று சில்லு வண்டியில் வலம் வந்தாய் வலம் இழந்த உன் கால்களால் திருப்பலிக்கு கோவிலின் உள்ளே செல்ல முடியாத நீ வெளியே நின்று நற்கருணை பெற்றாய்; செபமாலை சொன்னாய்; இறைவார்த்தை கேட்டாய்;
பலியின் அர்த்தம் உணர்ந்தாய் - உன்னால் முடிந்தவரை மற்றவர்களையும் விவிலியத்தைப் படித்து வாழச் சொன்னாய். இன்று உனக்கு வண்டி தேவையில்லை. இறையரசின் வாயில் உனக்கு அகலத்திறந்துள்ளது. உள்ளே சென்று இறை செம்மறியின் திருமண விருந்தில் பங்குபெற வேண்டுகின்றோம்.

### அமரர்
### கிறேசியன் ஜேம்ஸ் பொண்ட்

வளன் ஆச்சிரமம்,
யாழ்ப்பாணம்

Advt-14/16

---

PAATHUKAVALAN
Register as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

---

## நித்திய வாழ்வுக்குள்
## 10ம் வருட நினைவுகளுடன்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02.08.1933 | 25.02.2006 |

அன்பும் ஏழ்மையும் உன்னிடம்
குறையின்றி கண்டோம்.
நித்திய பேரின்பத்தில்
இருப்பதையிட்டு மகிழ்கின்றோம்.
ஆண்டவர் தம் பேரன்பால் ஓர்
அரியணை அமைத்தார்.
-ஆமேன்.

### திருமதி ஞா.றோஸ்மலர் (பேபி)

தாளையடி

என்றும் உம் பாசத்தின்
பிள்ளைகள்

Advt-12/16

---

## 30ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர்
### திரு. யோசப் அல்பிரட்*

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 31 - 10 - 1946 | 03 - 03 - 1986 |

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (அரு. 11:25)

ஆறைந்து ஆண்டுகளானாலும் – உம் அன்பு முகம் நாம் மறவோம். கலகலப்பான உம் பேச்சால் – பலர் கவலை மறந்து மகிழ்ந்தனரே! காலம் முழுவதும் உம் குரலை – எம் காதுகள் கேட்குமென நினைத்திருந்தோம் காலனவன் கயவனென – உம்மை பறித்துவிட்டான் எம்மிடமிருந்து!
ஆண்டுகள் முப்பது ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை உம் பிரிவின் துயரம்.
வானக வீட்டில் பிதாவின் வலப்புறம் நீர் மகிழ்ந்திருக்க
வாஞ்சையுடன் வேண்டுகின்றோம்!

கனேசபுரம், கிளிநொச்சி.

உம் பிரிவால் துயருறும்
பாசமிகு மனைவி, அன்புக்குரிய மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், குடும்ப உறவுகள், நண்பர்கள்.

Advt-15/16

---

## மரியாயின் சேனை ஆச்சேஸ் விழா அறிவித்தல்

எதிர்வரும் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் மரியன்னை பேராலயத்தில் காலை 9 மணிக்கு விழா நிகழ்வுகள் ஆரம்பமாகும். யாழ் கொமிற்சியத்தினால் நடாத்தப்படும் மேற்படி விழாவில் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்டின் பேனாட ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதுடன் சேனை ஊழியர்களின் அர்பணச் சடங்கும் நடைபெறும். அனைத்து மரியாயின் சேனை அங்கத்தவர் களும் உதவி அங்கத்தவர்களும் பங்கு பற்றிச் சிறப்பிக்க அழைக்கப்படுகிறார்கள்.

மரியாயின்சேனை – யாழ் கொமிற்ஷியம்

# சாவகச்சேரியில் திருப்பாலத்துவ தினம்

திருப்பாலத்துவ சபை தினத்தை ஒட்டியதான கருத்தமர்வு 30.01.2016 அன்று காலை சாவகச் சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் நாவற்குழி புனித அற்புத அன்னை ஆலய சிறார்களையும் உள்ளடக்கி பங்குத் தந்தை அருட்பணி யோசப் பிரான்சிஸ் தலைமையின் கீழ் வளர்பிறை இயக்குனர் அருட்சகோதரன் ஜெனிஸ்ரன் வழிகாட்டலில் வளர்பிறை குழுவினரால் நடாத்தப்பட்டது.

உடற்பயிற்சியுடன் ஆரம்பமான இந்நிகழ்வு குழுக் குழுக்களாக பிரிக்கப்பட்டு மதிப்பீடு, பொறுப் புணர்வு என்ற அம்சங்கள் பற்றி விபரிக்கப்பட்டு கலந்துரையாடப் பட்டதுடன், சிறார்களிடம் இருக்கும் ஆற்றல்கள் திறமைகள் என்பன கலை நிகழ்வுகள் மூலம் வெளிக்காட்டப் பட்டது.

அத்துடன் திருப்பாலத்துவ சபை தின திருப்பலியானது 31.02.2016 அன்று ஆலய சிறார்களால் ஒன்றிணைப்பில் பங்குத் தந்தை யோசப் பிரான்சிஸால் நிறைவேற்றப்பட்டது அத்துடன் சமபந்தி போஷன மதிய உணவு வழங்கப்பட்டு மழலைகள் தங்கள் மொழியில் அனைத்து சக ஆலய பிள்ளைகளுடன் மகிழ்வாக சல்லாபித்து இன் நிகழ்வினை இறை ஆசீருடன் நிறைவு செய்தனர்.

ம.அ.மரிய ஜெனிற்றா

## வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சி

திருமறைக் கலாமன்றத்தினரின் "வேள்வித் திருமகன்" என்ற திருப்பாடுகளின் காட்சி இவ்வருடம் மார்ச் மாதம் 5ம் திகதி இளவாலையிலும், 17.18.19.20 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணத்திலும் மேடையேற்றப்பட இருக்கின்றது.

## வல்லமையுள்ள புனிதர் யோசவ்வாஸ் அடிகளுக்கு நன்றி

எனது குடும்பத்தில் நீண்ட காலமாக இருந்த குறைக்காக நான் புனித யோசவ்வாஸ் அடிகளாரிடம் மன்றாடினேன். அவரின் அற்புதமான பரிந்துரையால் எம் குறை நீங்கியது. வல்லமையுள்ள புனிதராக புனித யோசவ்வாஸ் அடிகளாரைத் தந்த இறைவனுக்கு நன்றி.

ஓர் அடியாள்

## இலங்கையில் திருத்தந்தையின் பரிந்துரையின்படி புனித வியாழன் பாதம் கழுவும் சடங்கு

புனித வியாழன் பாதம் கழுவும் சடங்கில் பெண்களும் சேர்க்கப்பட வேண்டும் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பரிந்துரை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்று இலங்கை ஆயர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை ஆயர் பேரவைத் தலைவர் கர்தினால் மால்கம் இரஞ்சித் அவர்கள் இவ்வெள்ளியன்று வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், மேய்ப்பர்கள், பாதம் கழுவும் சடங்கிற்கு, ஒரு சிறு விசுவாசிகள் குழுவைத் தேர்ந்தெடுக்கலாம், இக்குழுவில், இறைமக்கள் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இச்சிறிய குழு, ஆண்கள் மற்றும் பெண்களைக் கொண்டிருக்கலாம், இளையோர், வயதானவர், நலமாக இருப்பவர், நோயாளிகள், இருபால் துறவியர் என்று, பலதரப்பட்ட இறைமக்களை இக்குழு கொண்டிருப்பது பொருத்தமானது என்று கர்தினால் இரஞ்சித் அவர்கள் கூறியுளளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில், திருப்பீட திருவழிபாட்டுப் பேராயம், புனித வியாழன் பாதம் கழுவும் சடங்கில் மாற்றங்களைக் கொண்டுவரும் விடுமுறைகளை கடந்த சனவரியில் வெளியிட்டது.

இந்த விதிமுறைகள், வருகிற மார்ச் 24ம் தேதி புனித வியாழனன்று நடைமுறைக்கு வருகின்றன.

## புனித நாட்டிற்கான 08 நாள் தவக்காலத் திருப்பயணம்

### இரக்கத்தின் ஆண்டிலே இறைவனின் இரக்கம் வரலாற்றில் வழிந்தோடிய இடங்களைத் தரிசிக்க அரிய வாய்ப்பு

நம் மீட்பரான இயேசுக்கிறிஸ்து வரலாற்றில் மனிதனாகப் பிறந்து வாழ்ந்த இஸ்ரேயல் நாட்டிற்கு திருப்பயணம் செய்ய விருமம்புவோருக்கு யாழ். மறைமாவட்ட திருப்பயண செயற்குழு ஒழுங்கு செய்யும் அரிய சந்தர்ப்பம்.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு மீண்டும் திரும்புவரை சகல பயண ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. இயேசுவின் வாழ்வோடு தொடர்புபட்ட சகல இடங்களுக்கும் செல்லுதல். அனைத்து விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும்.

பங்குனி மாதத்தில் பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. விரும்பியவர்கள் மாசி மாத முடிவிற்குள் தொடர்பு கொள்ளவும்.

**பயணத்தொகை: ஒருவருக்கு ரூபா 177,700/- மட்டுமே.**

**மேலதிக விபரங்களுக்கு:**
அருட்திரு போல் றொகான்
தொடர்புகளுக்கு: 0773792255
யாழ். மறைமாவட்ட திருப்பயண செயற்குழு

**(உங்கள் பங்குக் குருக்கள் மூலமாகவும் அருட்திரு போல் றொகான் அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்)**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரா
அந்தோனிசாமி லூர்துபிலோமினா

மலர்வு 04.03.1933 — உதிர்வு 20.01.2016

ஆன்ம சாந்திக்காக 19.02.2016 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு புனித லூசியாள் பேராலயத்திலும், ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலயத்திலும், யாழ்ப்பாணம் புனித மடுத்தினார் சிறிய குருமடத்திலும்,

இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பபட்டது. இவரின் ஆன்ம சாந்திக்காக மன்றாடும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்

Advt-/16

## 1ம் பக்க தொடர்ச்சி............

**உள ஆற்றுப்படுத்தல்....**

பெற்றோர் தம் பிள்ளகளுக்கும், ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கும் சிறுவயதிலிருந்தே அவர்கள் வாழ்வில் வரும் குழப்பங்கள், பிரச்சனைகளின்போது உள .ஆற்றுப்டுத்தல் செய்து வருகின்றபோது அவர்கள் பிற்காலத்தில் எப்படியான சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் பக்குவத்தைப் பெறுகிறார்கள் என்று குறிப்பிட்ட ஆயர், இப்பணியை முன்னைய நாள் பெற்றோர், ஆசிரியர்கள் சிறப்பாக ஆற்றியிருந்தாலும் தற்போது இப்பணியை ஆற்ற இன்றைய பெற்றோர், ஆசிரியர்கள் முன்வருவது குறைவு என்றும் கருத்துத் தெரிவித்தார். இதனால்தான் இன்று இந்த உள ஆற்றுப்படுத்தலின் தேவை அதிகரித்துள்ளது என்றும் இதற்கென்று வளவாளர்கள் பணியாற்ற வேண்டியிருக்கிறது என்றும் கூறினார்.

அருட்திரு. எஸ் ஜே இராஜநாயகம் அடிகளாரின் இந்நூல் புண்பட்ட நெஞ்சங்களுக்கு ஒரு மருந்தாக அமைகிறது.

**நீதிபதிகளாக...**

ஒப்புரவு அருளடையாளத்தை நாடிவருபவர், அன்னையாக விளங்கும் திருஅவையின் அருகாமையை உணர முடியாமல் போனால், அது அவரது நம்பிக்கையையும் குலைத்துவிடும் ஆபத்து உள்ளதென்று, கூடியிருந்த அருள்பணியாளர்களிடம் திருத்தந்தை கூறினார்.

ஒப்புரவு அருளடையாளத்தை அணுகிவருபவரை வரவேற்பது, அவருக்கு செவிமடுப்பது, அவரை மன்னிப்பது, அவர் தேடும் அமைதியை அளிப்பது என்று அனைத்தையும் செய்வது, கிறிஸ்துவே என்றும், அந்த அருளடையாளத்தை வழங்கும் அருள் பணியாளர்கள், கிறிஸ்துவின் மன்னிப்பை முதலில் பெறவேண்டிய நிலையில் உள்ளவர்கள் என்றும் திருத்தந்தை தன் உரையில் வலியுறுத்தினார்.

1953ம் ஆண்டு, செப்டம்பர் 21ம் தேதி தான் மேற்கொண்ட ஒப்புரவு அருளடையாளம் தன் வாழ்வை மாற்றியது என்று நினைவுகூர்ந்த திருத்தந்தை, அந்த அருளடையாளத்தின்போது தன்னை அந்த அருள் பணியாளர் வரவேற்று, ஒரு தந்தைக்குரிய பாசத்தை வெளிப் படுத்திய பாங்கு தன் மனதில் இன்னும் பசுமையாக உள்ளது என்று எடுத்துரைத்தார்.

ஒரு சில வேளைகளில் ஒப்புரவு அருளடையாளம் பெற வருவோர், தங்கள் உள்ளத்தில் இருப்பனவற்றை வார்த்தைகளால் கூற இயலாமல் தடுமாறும்போது, அவர்கள் நிலையை கனிவுடன் புரிந்து கொண்டு, மன்னிப்பை நாடி அவர்கள் வந்துள்ளனர் என்பதை யும், தங்கள் வாழ்வை மாற்றி அமைக்க விரும்புகின்றனர் என்ப தையும் நாம் உணர்ந்து, அவர் களை வழிநடத்தவேண்டும் என்று திருத்தந்தை 'இரக்கத்தின் மறைப் பணியாளர்களை' கேட்டுக் கொண்டார்.

ஒப்புரவு அருளடையாளத்தை அணுகி வருபவர் உணரும் வெட்க உணர்வைக் குறித்து, தன் உரையின் இறுதிப் பகுதியில் குறிப்பிட்டுப் பேசியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவ்வேளையில், அருள்பணி யாளர்கள் அங்கிருக்கும் மனிதருக்கு மரியாதையும், ஊக்கமும் வழங்கவேண்டியது அவரது கடமை என்று வலியுறுத்திப் பேசினார்.

தவறு செய்துவிட்டோம் என்பதை உணர்ந்த ஆதாம், ஏவாள் இருவருமே, வெட்கப்பட்டனர் என்றும், அவர்கள் இறைவனைக் காண விருப்பமின்றி விலகிச் சென்றனர் (தொடக்க நூல் 3:8-10) என்றும் குறிப்பிட்ட திருத்தந்தை, பாவத்தில் விழும் மனிதர்களின் முதல் உணர்வுகள், இறைவனை விட்டு விலகிச் செல்வது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

நேர்மையானவர் என்றும் குற்றமற்றவர் என்றும் கூறப்படும் நோவா, மது மயக்கத்தில் நிலை இழந்து போவதைக் குறிப்பிட்டுப் பேசியத் திருத்தந்தை, ஆடையின்றி கிடந்த நோவாவின் மீது துணியைப் போர்த்திய அவரது இரு மகன்கள், அவருக்குரிய மதிப்பை மீண்டும் அளித்தனர் (தொ.நூல் 9:18-23) என்பதையும் .சுட்டிக்காட்டினார்.

ஒப்புரவு அருளடையாளம் வழங்கும் அருள்பணியாளர்கள், ஒரு நீதிபதியைப் போல் அங்கு அமர்ந்திருப்பதற்குப் பதில், நோவாவின் இரு மகன்களைப் போல், தங்களை நாடிவரும் மனிதர்களின் மாண்பை மீண்டும் நிலைநிறுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று திருத்தந்தை தன் உரையில் கேட்டுக்கொண்டார்.

இரக்கத்தின் மறைப் பணியாளர்களாக' உலகெங்கும் செல்லும் அருள்பணியாளர்களுடன் தானும் துணைவருவதாகக் கூறியத் திருத்தந்தை, அவர்கள் மேற்கொள்ளும் பணியில், புனித லியோபோல்தோ, புனித பியோ, இன்னும் பல புனிதமான அருள் பணியாளர்களும் துணைவருகின்றனர் என்ற வார்த்தைகளுடன் தன் உரையை நிறைவு செய்தார்.

**காவலூர் மண்ணில்...**

கையும், திருகோணமலை ஓய்வுநிலை ஆயரும் மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகருமான மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையும் கலந்து சிறப்பித்தது எம் பங்கிற்கு கிடைத்த மாபெரும் ஆசீர் ஆகும்.

எமது புதிய ஆயர் காலை 8.45 மணிக்கு புனித அந்தோனியார் கல்லூரி நுழைவாயிலில் பங்குத்தந்தையாலும் ஏனைய குருக்களாலும் மாலை அணிவிக் கப்பட்டு திறந்த வாகனத்தில் யாழ்/ ஊர் புனித மரியாள் றோ. க. மகளீர் வித்தியாலய மற்றும் யாழ்/ கரம்பொன் புனித சிறிய புஸ்பம் மகளீர் வித்தியாலய மாண வியரின் பான்ட் வாத்திய இசை யுடன் ஊர்காவற்றுறை சந்திக்கு அழைத்துவரப்பட்டார். அதன் பின்னர் ஆயர் அவர்கள் உறவினர்களாலும் பங்கு மக்களால் பவனியாக அழைத்துவரப்பட டார். அதனைத் தொடர்ந்து புதிய ஆயரின் தலைமையில் ஏனைய ஆயர்களும் குருக்களும் இணைந்து கூட்டுத்திருப்பலி நிறைவேற்றினர் திருப்பலியை தொடர்ந்து

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2014ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.